Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 02 வெள்ளிக்கிழமை (18-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 226

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபை பொதுசன நூலகம்

# படையினர் நிலைகள் மீது புலிகள் நெடுங்கேணியில் திடீர் தாக்குதல்!

## மூன்று மணி நேரம் நேருக்குநேர் சமர்

கொழும்பு, ஜூலை 18

நெடுங்கேணிக்கு வடமேற்கே 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையில் 3 மணி நேரம் நேருக்குநேர் சமர் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்தச் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட 17 படையினர் கொல்லப் பட்டதாகவும் — இரு அதிகாரிகள் உட்பட 27 படையினர் காயமடைந்ததாகவும் — இராணுவப் பேச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் தாக்குதல்; ஷெல் வீச்சு!

வவுனியா, ஜூலை 18

நேற்று முன்தினம் இரவு நெடுங்கேணியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து நேற்றுக் காலை நெடுங்கேணிப் பகுதியில் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

மண்கிண்டிமலை இராணுவ முகாமில் இருந்து நெடுங்கேணிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல் தாக்குதல்கள் காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நீடித்தன. (இ-10-164)

## நாராயணன் புதிய ஜனாதிபதி சேஷன் கட்டுப் பணம் இழப்பு

புதுடில்லி ஜூலை 18

கே. ஆர். நாராயணன் இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியாகிறார்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரி எஸ். கோபாலன் நேற்று மாலை அறிவித்தார்.

கே. ஆர். நாராயணன் 4 ஆயிரத்து 231 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரி. என். சேஷன் 240 வாக்குகள் பெற்றார். 171 வாக்குகள் செல்லாதவை என்று அறிவிக்கப் பட்டது.

கே. ஆர். நாராயணன் பெற்ற மொத்த வாக்குகளின் மதிப்பு 9 இலட்சத்து 56 ஆயிரத்து 290 ஆகும்.

மொத்தம் பதிவான வாக்குகளின் மதிப்பில் இது 95 சதவீதமாகும்.

இதுவரை இந்தியாவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற பழமொழி மாறப் போகுது...!

## வடகொரிய மாலுமியின் சடலம்

கொழும்பு, ஜூலை 18

கடந்த வாரம் 'மொறாங் பொங்' என்னும் கப்பல் விடுதலைப் புலிகளால் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடத்தப்பட்டபோது இடம் பெற்ற சம்பவத்தில் பலியான வடகொரிய மாலுமியின் சடலம் இன்று வடகொரியா அனுப்பி வைக்கப் படவுள்ளது.

அக்கப்பலைச் சேர்ந்த ஏனைய 37 மாலுமிகளையும் வடகொரியாவுக்கு அனுப்புவது தொடர்பான ஆவணங்கள் யாவும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன எனவும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'பாண்குண்டு' வெடித்து சிப்பாய்கள் காயம்

### கல்லடி முகாமில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை 18

நேற்றுக் காலை 7.45 மணியளவில் மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் ''பாண் குண்டு'' ஒன்று வெடித்த சம்பவத்தில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இராணுவத்துக்கு பாண் விநியோகிக்கும் பேக்கரியிலிருந்து வழமைபோல் அனுப்பி வைக்கப்பட்ட பாண்களில் ஒன்றுக்குள் இக் குண்டு வைக்கப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.

இராணுவ முகாமின் சமையல் அறையில், இரு சிப்பாய்கள் பாணை வெட்டியபோதே குண்டு வெடித்தது.

இச்சம்பவம் தொடர்பாக பேக்கரி உரிமையாளரும் மற்றும் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். (இ-10-21)

## யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் வைத்து சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப் பட்டவர்களில் 17 பேர் நேற்று முன்தினம் அனுராதபுரம் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தற்போது திருகோணமலை ஈ. பி. டி. பி. பணிமனையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் அனைவரும் திருகோணமலையில் தங்கியுள்ளனர்.

கப்பல் போக்குவரத்து ஆரம்பித்ததும் இவர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவார்கள் என யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

பிணையில் விடுதலையானோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ சிவசுப்பிரமணியம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல்களுக்கு செஞ்சிலுவையின் வழித்துணை கிடைக்கும் வரை கடற்படை பாதுகாப்பு வழங்கும்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

யாழ்: குடாநாட்டுக்கு பொருள்களையும் இடம் பெயர்ந்தோரையும் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் வழித்துணை கிடைக்கும் வரை கடற்படையினரால் பாதுகாப்பு வழங்கப்படும்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று செய்தியாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார்:

வடக்குக்கான கப்பல் சேவையை நடத்த வழித்துணை வழங்கும்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடமும் அரசு கோரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே.

அதேசமயம் வடக்குக்கான சரக்கு மற்றும் பயணிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கடல்வழிப் பாதைத் தடை:

## புலிகளின் அறிக்கை குறித்து ஈ. பி. டி. பி. அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

'' வடக்குக்கான கடல் வழிப்பாதையைக் கட்டுப் படுத்துவதற்கான முடிவு என்ற ரீதியில் புலிகளின் லண்டன் செயலக அறிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ''

ஈ. பி. டி. பி. அமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்று வசித்து வருகின்றார்கள். தவிர, யாழ். குடாநாட்டில் ஓரளவான இயல்பு வாழ்க்கை இருப்பதை அறிந்து வன்னியிலிருந்து மக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள் முதல் மீண்டும் விமான சேவை?

கடந்த திங்கள் முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த விமான சேவை மீண்டும் அடுத்த திங்கள் முதல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஏற்கனவே எடுக்கப் பட்ட தீர்மானம் எனவும் இதில் மாற்றம் எதுவும் இருப்பின் பின்னர் தெரிவிக்கப் படும் எனவும் யாழ். சிவில் நிர்வாகப்பணிமனை தெரிவித்தது. (இ-10)

## நிபந்தனையுடனேயே கடற்படைப் பாதுகாப்பு?

கொழும்பு, ஜூலை 18

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வழித்துணை கிடைக்கும் வரை வடக்குக்கான கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தயாராக இருப்பதாக கடற்படையினர் தெரிவித்த போதிலும். கடற்படை அதற்கு நிபந்தனை ஒன்றை விதித்திருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கப்பல்கள் கரையில்இருந்து 30 மைல் தூரத்தில் பயணம் செய்ய வேண்டும் என்பதே இந்த நிபந்தனை ஆகும்.

இந்த நிபந்தனைக்கு இணங்க பொருள்களையும் பயணிகளையும் கொண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியக் கப்பலை மீட்க செஞ். குழு புலிகளுடன் பேச்சு!

கொழும்பு, ஜூலை. 18 விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வட கொரிய கப்பலான „மொறங் பொங்'' கப்பலை மீட்க செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.

கொழும்பில் தற்சமயம் தங்கியிருக்கும் கப்பல் சிப்பந்திகள் கப்பல் மீட்கப்பட்ட பின்னரே தாம் நாடு திரும்புவோம் என அடம்பிடிப்பதாகவும்- இதையடுத்து கப்பலை வாடகைக்கு அமர்த்திய கப்பல் நிறுவனம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியை நாடியுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

அலம்பில் கடற் பகுதியில் அக்கப்பல் புலிகளின்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

[ஜ-21-3]

---

## 31 ஆம் நினைவு நாளும் நன்றி நவிலலும்

### திருமதி நல்லம்மா சுப்பையா அவர்கள்

(இணுவில் மேற்கு)

நோயுறும் வேளையில் உதவிய டாக்டர் K. பாலா (இணுவில்) அவர்களுக்கும் அவரின் நிறைவு நிகழ்வில் கலந்து கொண்ட உறவினர், கல்வி அதிகாரிகள், அதிபர்கள் மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளை நவில்கின்றோம்.

குடும்பத்தினர்

(47337)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலய ஆசிரியை

செல்வி கா. காயித்திரிதேவி

அவர்களின் அன்னையார்

### திருமதி நிமலாதேவி காங்கேசன்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்துடன் அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலய

(48444) அதிபர், ஆசிரியர்கள்.

---

## அறிவித்தல்

யா/ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரி

### தமிழ்ச் சங்கம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

எமது தமிழ்ச் சங்க நிர்வாகத்தினால் 18/7/1997 அன்று நடாத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இவ்வதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 18/10/1997 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்

தமிழ்ச்சங்கம்

யா/ஸ்ரீசோமாஸ்கந்தக்கல் லூரி,
புத்தூர்.

(48451)

---

## மரண அறிவித்தல்

### யோசேப் இரத்தினம்

(கட்டட ஒப்பந்தகாரர்)

கொழும்புத்துறை ஆனந்தன்வடலி வீதியைச் சேர்ந்த யோசேப் இரத்தினம் 17 - 07 - 1997 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அடைக்கலமேரியின் (அருளம்மா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பலீலா, ஞானமலர், அன்ரன் (கனடா), லோறன்ஸ் சுரேந்திரன் (கனடா), புஸ்பராசா (டென்மார்க்), அருள்நேசராசா (டென்மார்க்), ஜெராட் செல்வராசா (சுவிஸ்), ஞானசீலி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யேசுதாசன் (மடுராணி), துரைநாயகம், செல்வநாயகி (கனடா), ஜெயந்தி (கனடா), ஜெயந்தி (டென்மார்க்), ஆழின் (டென்மார்க்), ரேனுகா (சுவிஸ்), கெனத் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், றொசானி, அனிஸ்ரஸ், அமலஸ், சபேசன், கோசலானி, மயூரா, அனிஸ்ரா, பெகிஸ்ரன், மரியதர்சினி, உசாந்தினி, நிசாந்தினி, மகிலன், கென்றிக், சாம்சன், செறின், பிரசாந், சுலக்ஷன், சியாம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று 18-07-1997 வெள்ளிக்கிழமை 2.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யேசுதாசன் (மடுராணி)
(மருமகன்)

35, சென்மேரிஸ் 1 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(48445)

---

இனப்பிரச்சினை தொடர்பான

# அரசமைப்புத் திருத்தத்துக்கு பொ.ஐ.மு.உறுப்பினர் ஆதரவு

கொழும்பு, ஜூலை 18 இனப்பிரச்சினை தொடர்பான அரசமைப்புத் திருத்தத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி அமைப்பாளர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் அடிப்படை அம்சமாக மத்திய அரசாங்கத்தின் ஒரு பகுதி அதிகாரங்கள் பரவலாக்கப்படும்.

அதே சமயம் விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம், வெற்றி பெறும் உறுதியான நோக்கத்துடன் உத்வேகத்துடன் மேற்கொள்ளப்படும்.

தீர்வுத்திட்ட விடயங்களை அரச தரப்பு எம். பிக்களுக்கு விளங்குவதற்கான கலந்துரையாடல் கூட்டத்தின் முடிவில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரு தினங்கள் களுத்துறையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது தெரிந்ததே.

கலந்துரையாடலின் இறுதியில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட முன்வைத்த தீர்மானத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி அமைப்பாளர்களும் அங்கீகரித்தனர்.

நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளைத் தவிர வேறு பரிகாரம் எதுவும் கிடையாது என்றும்—

யுத்த நிலைமையை எதிர்நோக்கியுள்ள மற்றைய நாடுகள் பிணக்குக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டிருக்கின்றன என்றும்— அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த யோசனைகளை எதிர்ப்பவர்கள் புதிய யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (இ-5)

---

## யாழ். மாணவர் ஈ. பி. டி. பி. பராமரிப்பில்

திருகோணமலைக்கு வலைப் பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக சென்ற யாழ். மாவட்ட மாணவர்கள் தற்போது திருகோணமலை ஈ. பி. டி. பி. அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இம் மாத முற்பகுதியில் பாடசாலை ரீதியான போட்டிக்காக சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கலைப்பீடத் தேர்வுகள்- 1995

1997- 08- 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த முதலாம் ஆண்டு கலை/ வர்த்தகம் / முகாமைத்துவம் / இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள் 25— 08— 97 -க்கு பிற்போடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மற்றைய தேர்வுகள் நடைபெறும். பரீட்சைகளுக்குரிய நேரசூசியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளம்பரப் பலகையிலும், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை விளம்பரப்பலகையிலும் பார்வையிடலாம்.

-பதிவாளருக்காக

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1997- 07- 17

(சி-1149)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பல்கலைக்கழக அனுமதி 1996/97

1996/97 கல்வியாண்டுக்கு சகல பீடங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில், இதுவரை பதிவுசெய்யாதோர், பதிவுசெய்வதற்கான இறுதி நாள் 15-08-1997 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுசெய்யாத மாணவர்களின் இடங்கள் வெற்றிடமாகக் கருதப்பட்டு, அவ்விடத்துக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு பெயர்ப்பட்டியல் அனுப்பப்படும்.

எனவே தங்களை இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள் மேற்குறிக்கப்பட்ட திகதிக்கு முன்னராகப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்

1997-07-16.

(சி/1146)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பட்டமளிப்பு விழா 1996 வீடியோ, புகைப்படம் பிடித்தல்

எமது பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 06-09-97 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இவ் விழாவுக்கு 500 படங்கள் வரை எடுக்கவேண்டும். (போஸ்ட் காட் பருமனுள்ள கலர்ப் புகைப்படம்) எனவே தகுதிவாய்ந்த வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக் கூற்றை 31-07-97 ஆம் திகதிக்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (வீடியோப் பிடிப்பாளர்கள் தங்கள் மின் பிறப்பாக்கியைக் கொண்டு வருதல் வேண்டும்)

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
16-07-1997

(சி/1148)

---

## ஸ்ரீ செல்வா திரை அரங்கு

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

10.00 மணி - 2.00 மணி

கமல், சுகன்யா, செந்தில், கவுண்டமணி நடித்த

### இந்தியன்

(புதிய C. D. பிரதி- 3 மணித்தியாலம்)

(48446)

---

## G. C. E. A/L MODEL PAPER தமிழ் I, II

1997 ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களம் வெளியிட்ட முன் மாதிரி வினாத்தாள்களின் அடிப்படையாகத் தயாரிக்கப்பட்ட ஆறு வினாத்தாள்கள் அடங்கியது.

மாற்றியமைத்த புதிய பாடத்திட்டம்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(43449)

---

யா. மா. வி. உ. ச. நு. கூ. ச. சமாசம்:

## பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி விடயம் சம்பந்தமாக — 14-7-97 உதயன் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரம் கீழ்க்கண்டவாறு திருத்தப்படுகின்றது.

1.) மூன்று மைல்கள் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை என்ற வாசகம் நீக்கப்படுகிறது.

2.) தெரிவு செய்யப்படும் பணியாளர் சமாச தலைமைப் பணியகத்திலிருந்து மூன்றுமைல்கள் சுற்றாடலில் வசிக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

பொதுமுகாமையாளர்

இல-111 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
1997-7-17

(C/1147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட.-கிழக்கு மக்களுக்கு விரைவில் வறுமை நிவாரண உணவுமுத்திரை

கொழும்பு, ஜூலை 18

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சமுர்த்திதிட்டம் அமுல் செய்யப்படும் வரை வறுமை நிவாரண உணவு முத்திரைகளை வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையை விரைவாக நடைமுறைப்படுத்துவதென நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த உயர் மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது,

வடக்கு புனரமைப்பு, அபிவிருத்தி தொடர்பாக கூட்டப்பட்ட மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியால் இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்ததாயினும், இறுதியில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பென்டி தலைமையிலேயே நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்கள் உட்பட மாகாண ஆளுநர், செயலாளர்கள் கலந்து கொண்ட இம் மாநாட்டில் எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:-

★ கப்பல் வசதியின்றி திருகோணமலை, மன்னார்ப் பகுதியில் உள்ளவர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்தல்.

★ நெடுந்தீவுக்கு சேவையில் ஈடுபடுத்த 'குமுதினி' படகைத் திருத்தல்.

★ கிளிநொச்சி மாவட்டத்தில் 700 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிவாரணம் வழங்கல்.

(ஐ-164-3)

# அடியாருக்கு மாணிக்ககல் கொடுத்து மண்ணாங்கட்டி வாங்கிய சிவன்

ஆன்மாக்கள் சிற்றறிவும், சிறு தொழிலும், அற்ப ஆற்றலும் உடையவை. பக்குவமடைந்த ஆன்மாவுக்கு இறைவன் தனது தெய்வ நிலையில் இருந்து இறங்கி, திருவருள் திறத்தை உணர வைத்து, இறுதியில் காட்சி கொடுத்து ஆட்கொண்டு (அடிமையாக ஏற்று) அருள் புரிவான் என்று சைவ சித்தாந்த நூல்கள் பேசுகின்றன.

சிவபிரான் திருப்பெருந்துறையின் கண்ணே அந்தண வேடம் தாங்கிய பரமாச்சாரியராக எழுந்தருளி வாதவூரருக்கு நயனம் முதலாய ஏழு தீட்சைகளை வழங்கினார். (ஏழு தீட்சைகளாவன: நயனம், பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம், ஒளத்திரி) நயன தீட்சையால் அவரைப் பீடித்திருந்த ஆணவ மலம் வலிமை இழந்தது.

எல்லையில்லாத பேரின்பக் கடலில் மூழ்கிய வாதவூரர் "கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க" என்று துதித்துச் சிவபிரானுடைய தோற்றம், தொழில், ஆற்றல், இயல்பு என்பனவற்றையும் வாழ்க வாழ்க" என்று பல முறை போற்றிப் பரவிச் சிவபுராணம் பாடினார்.

மனநிறைவு பெறாத மணிவாசகர் "சுடர் பொற் குன்றைத் தோவா (குறைவு இல்லாத) முத்தை, பொல்லா (உளி முதலியவற்றால் செதுக்கப்படாத) மணியைப் புனையப் பெறுவது என்றோ" என்று இறைவன் திருவடி சேரும் அவாவினால் புணர்ச்சிப் பத்துப் பாடினார். இவையாவும் திருப்பெருந்துறையில் நிகழ்ந்தவை.

திருப்பெருந்துறையை நீங்கித் தில்லையை (சிதம்பரத்தை) அடைந்த மணிவாசகப் பெருமான், அங்கு தவ வாழ்வை மேற்கொண்டு தங்கியிருந்த போது கோயிற்றிருப்பதிகம் பாடினார். இது அவருடைய பக்தியின் முதிர்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான பகுதி.

உடல் தில்லையிலும் உள்ளம் திருப்பெருந்துறையிலுமாக ஊசலாடி அலையுண்ட அடிகளாரின் இந்தப் பாடல்கள் சிவ சிந்தையுடன் படிப்போரைப் பரவசமடையச் செய்யும் இயல்பு கொண்டவை. மணிவாசகப் பெருமானை அடிமையாக்கி ஆண்டு கொண்டமையினால்

## ஞானக்கதிர்

சிவபிரானுக்கு அணுவளவேனும் பயனோ இன்பமோ இல்லை. இறைவன் எண்குணத்தினன். எல்லாம் கடந்தவன். ஆனால் மணிவாசகருக்கு எல்லையில்லாத பேரின்பம் கிடைத்துவிட்டது.

திருப்பெருந்துறையிலே தாம் கண்டு தரிசித்துக் களித்தபரமாச்சாரியாரின் திருமேனிக் காட்சியே சிந்தையை நிறைத்தது; ஆனந்த வெள்ளம் மடை திறந்து வழிந்தோட இறைவனுடன் பேசுகிறார்:

"திருப்பெருந்துறையில் கோயில் கொண்ட எம்பெருமானே, சிவபிரானே, இறைவா, எனது உள்ளத்தையே திருக்கோயிலாக்கி வீற்றிருந்தது மட்டு மன்றி, எனது உடலையும் உனதாக்கிக் கொண்டாய். உன்னையே எனக்குத் தந்துவிட்டாய். இதனால் நான் அளவிறந்த பேரின்பம் பெற்றேன்;

பதிலுக்கு உனது அருள் திருமேனியை எனது உயிரும் உணர்வும் தங்கும் இடமாக எனக்குத் தந்தனை நீ என்னிடமிருந்து என்ன பெற்றனை? (ஒன்றும் இல்லை).

நான் என்னை உனக்குத் தந்தன். நீ என்னுள் புகுந்து உன்னை எனக்குத் தந்தாய். இது ஒரு புதுமையான பண்டமாற்று, சங்கரா நீ ஞானமே வடிவானவன். இருந்தும் இந்த விடயத்தில் ஏமாந்து விட்டாய்.

மதிப்பிட முடியாத மாணிக்கக் கல்லை (உன்னை) எனக்குத் தந்து விட்டு, எதற்கும் உதவாத மண்ணாங்கட்டியை (என்னை) பெற்றுக் கொண்டனை. ஆதலால் இந்தப் பண்ட மாற்றில் நம் இருவரில் (யார்) திறமையுள்ளவர், யார் சொல்லுக. எதிர் பாராத வகையில் என்னை மேலோனாக்கிய, நின் மடைமையின்பொருட்டு உனக்குக் கைம்மாறு (பிரதி உபகாரம்) செய்யும் வகை அறியேன்:

தந்ததுன் தன்னைக் கொண்ட தென்தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

உடலிடம் கொண்டாய், சங்கரா யார் சதுரர் என்று இறைவனைப் பார்க்கிலும் தான் சமர்த்தர் என்று கூறி இகழ்வது போல நயமாகவே புகழ்ந்த மணிவாசகப் பெருமானின் பக்தி வைராக்கியம் போற்றுதற்குரியது.

- மூளாய் அருணாசலம்

# ஆயிரத்து 436 பேர் குருநகர் வருகை

வன்னியில் இருந்து கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களில் சுமார் 498 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 436 பேர் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

310 குடும்பங்களைச் சேர்ந்த 867 பேர் திங்களன்றும், 188 குடும்பங்களைச் சேர்ந்த 569 பேர் செய்வாயன்றும் வந்து சேர்ந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-51)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம். ஜூலை 18

இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் கோயிலில் மகாலக்ஷ்மி, சுமங்கலி, தீப பூஜைகள் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளன. (ஐ-4)

★ ★ ★

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட துர்க்காபுர ஞானதுர்க்கை அம்மன் கோயிலின் அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

கொக்குவில்-நந்தாவில் உற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனை பூர்த்தி நாளை சனிக்கிழமை பூரணை தினத்தன்று காலை 7-00 மணிக்கு 108 கலச சங்காபிஷேகத்துடனும், விசேட அபிஷேகம், பூசை, வழிபாட்டுடனும் இடம், பெறும் (ஐ-30)

★ ★ ★

அனலைதீவு ஐயனார் கோயில் தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(ஐ-111)

இணுவில் காரைக்கால் சிவன் கோயிலின் புதியதேர் வெள்ளோட்ட விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று தேர்த்திருவிழா நடைபெறும். (ஐ-5)

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் வருடாந்தநிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "அளவிலாத பெருமையார்" என்ற தலைப்பில் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சொற்பொழியாற்றுவார்.

## சமயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் கருத்தரங்கு வண்ணை, நாவலர் மகாவித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் நடைபெறும்.

"நாட்டின் இன்றைய காலச் சூழலில் சைவசமயிகளின் பங்கு" என்ற தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஐ)

## திருமந்திரம் விரிவுரை

கொழும்புத்துறை, ஜூலை 18

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருமந்திரம் நான்காவது தொடர் விரிவுரை இடம்பெறும்.

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் இவ் விரிவுரையை வழங்குவார். (ஐ-30)

## சைக்கிள் இலக்க தகடு பரிசோதனை

தென்மராட்சி, ஜூலை 18

சாவகச்சேரி நகரப் பகுதியில் சைக்கிள்களில் இலக்கத் தகடுகள்(நம்பர் பிளேட்) பரிசோதிக்கப்படுவதால் சைக்கிள் உரிமையாளர்கள் முண்டியடித்துக் கொண்டு இலக்கத் தகடுகள் பெறுவதில் ஆர்வம் காட்டுவதைக் காணமுடிகிறது.

(ஐ-117)

## கூ. சங்கக்கிளை மூடப்பட்டுள்ளது

இளாலியில் இயங்கி வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் நிவாரண உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள பலைக்குச் செல்கின்றனர்.

இப் பகுதிக்கு வாகன வசதியில்லாததால் இப்பகுதி மக்கள் நடந்து சென்றே நிவாரண உலர் உணவுப் பொருள்களைப்பெற வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-117)

# வீரப்பனுடன் தொடர்பு கொள்ள 'நக்கீரன்' சஞ்சிகை ஆசிரியர் உதவி

## தமிழக அரசு கோரியது

புதுடில்லி, ஜூலை 18

சந்தன மரக் கடத்தல் பேர்வழி வீரப்பனுடன் தொடர்பு கொள்வதற்காக தமிழ் வார இதழான 'நக்கீர'னின் ஆசிரியர் கோபாலின் உதவியை தமிழக அரசு நாட விருப்பதாக மாநில அரசின் உள்துறைச் செயலாளர் ஆர். பூர்ணலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

வீரப்பனை ஏற்கனவே மூன்று முறை கோபால் சந்தித்திருப்பதால் அவரின் உதவி நாடப்படுவதாக செய்திக் குறிப்பொன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக அரசின் உயரதிகாரிகள் தமிழக அரசு உயரதிகாரிகளுடன் கடந்த இரண்டு தினங்களாக பேச்சுக்களை நடத்தினார்கள்.

வீரப்பனுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட பின்னரே அவரது கோரிக்கைகள் என்ன என்பது தெரியவரும் என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கே. என். நம்பியாரும் காவல்துறைத் தலைமை இயக்குநரும் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

தமிழக அரசின் இந்த உதவிக் கோரிக்கையை பரிசீலனையின் பின்னர் ஏற்றுக் கொள்வதாக 'நக்கீரன்' சஞ்சிகையின் ஆசிரியர் தெரிவித்தார்.

சுமார் ஒன்றரை வருட காலத்திற்கு முன்னர் தம்மைச் சந்தித்த 'நக்கீரன்' சஞ்சிகையின் செய்தியாளர்கள் ஊடாகவே வீரப்பன் தனது நிபந்தனைகள், நிலைப்பாடுகள் குறித்து தமிழக அரசுக்கு அறிவித்திருந்தார்.

அச்சமயம் வீரப்பன் அளித்த பேட்டி அவரது படங்களுடன் 'நக்கீரன்' சஞ்சிகையில் வெளியாகி தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (ஐ-5)

# நடுவானில் மோதவிருந்த இந்திய விமானங்கள்!

## தெய்வாதீனமாகத் தப்பின

புதுடில்லி. ஜூலை 18

தென்னிந்தியாவில் மங்களூர்ப் பகுதியில் வானில் நேருக்கு நேராக மோதவிருந்த இரு விமானங்கள் தெய்வாதீனமாகத் தப்பியுள்ளன.

"ஏயார் இந்தியா" நிறுவனத்துக்குச் சொந்தமான "ஏயார் பஸ் - 300" ரக விமானமும், தனியார் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான 'போயிங்' — 737 ரக விமானமுமே நடுவானில் மோதிச் சிதற இருந்தன.

இந்த இரு விமானங்களும் திடீரென மிக அருகில் நெருங்கிய வேளை இரு விமானிகளும் ஒருவரை ஒருவர் நேரடியாகப் பார்க்க முடிந்ததாகவும் எனினும் அவை ஒன்றுடன் ஒன்று மோதாமல் தப்பியுள்ளன என்றும் பி.ரி., ஐ. செய்தி தெரிவித்தது.

புதுடில்லிக்கு அருகே கடந்த ஆண்டு நவம்பரில் இரு விமானங்கள் வானில் மோதிச் சிதறியதில் 349 பயணிகள் பலியானது தெரிந்ததே.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினிப் படகை உடன் திருத்தி சேவையை ஆரம்பிக்கக் கோரிக்கை

## நெடுந்தீவு பிரசைகள் குழு கடிதம்

நெடுந்தீவு ஜூலை 18

நெடுந்தீவு மக்களின் சீரான கடல் பிரயாணச் சேவைக்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளக் கூடியதாக 'குமுதினி' படகைதுரிதமாக புனரமைத்து உதவுமாறு நெடுந்தீவு பிரஜைகள் குழு யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது:

படகுத் திருத்த வேலைகள் குறித்து பிரஜைகக் குழுத்தலைவர் சிவ. சங்கரப்பிள்ளை வீதி அதிகாரசபைக்குஅனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வருடாவருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டும் கூட படகு திருத்த வேலைகள் இடம் பெறவில்லை; கடந்த வருடம் காரைநகர் கடற்படைத் தவபதியின் முயற்சியால் புதிய இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில் ஏனைய திருத்த வேலைகளுக்கென குமுதினி படகு தங்களிடம் கையளிக்கப்பட்டது.

ஆறு வருடங்கள் சேவையில் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் படகின் அடித்தளம் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் துரிதமாகச் சீரமைத்து, குமுதினிப் படகை மீண்டும் சேவைக்கு விடுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 111)

# பெரியார்களின் சிலைகள் யாழ். நகரில் புனரமைப்பு

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள நான்கு பெரியார்களின் சிலைகள் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தகர்களினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன:

இவ் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர், ஒளவையார், சோமசுந்தரப் புலவர், மகாத்மா காந்தி ஆகியோரின் சிலைகளே புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு மெருகூட்டப்படவுள்ளன.

இதன் ஆரம்பப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் சி. நமசிவாயம் தெரிவித்தார். (ஐ-135)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

# கைதுசெய்யப்பட்டோரில் 42 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில்!

## பெயர் விவரங்கள் யாழ். நீதிமன்றில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

குடாநாட்டிலும், பிற மாவட்டங்களிலும் கைது செய்யப்பட்ட 42 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸார் யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களும் பொலீஸாரால் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவர்கள் எப்போது விடுவிக்கப்படுவர் என்ற விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 பேரின் விவரம் வருமாறு:

★ சுதேதன் யமுனா— பாடசாலை ஒழுங்கை ஆனைக்கோட்டை.

★ ஜோன் பிரான்ஸிஸ்— குருநகர்.

★ சண்முகம் கோபாலகிருஷ்ணன்— மறவன்புலவு.

★ கார்த்திகேசு முத்துக்குமார்— தனங்கிளப்பு.

★ சதாசிவம் யோகேஸ்வரி— வேலணை கிழக்கு.

★ தங்கத்துரை ஐங்கரன் —நாச்சிக்குடா.

★ பிரான்ஸிஸ் செபஸ்தியார் குறூஸ்— மன்னார்.

★ பி. சின்னக்கிளி— நாச்சிக்குடா.

★ வேலாயுதன் அமலதாஸ் — மானிப்பாய்.

★ ஜெயராஜா கிருஷ்ணகுமார் — நவாலி மேற்கு.

★ ரத்தினம் அருந்தவக்குமார் — கைதடி கிழக்கு.

★ ராசலிங்கம் அன்பழகன் — நவபுரம், கைதடி.

★ ராசரத்தினம் சேதுபதி சுழிபுரம் மேற்கு.

★ சின்னப்பு சாந்தலிங்கம் — கிளிநொச்சி.

★ கந்தப்பன் சரவணபவானந்தன்— நாச்சிக்குடா.

★ சின்னத்துரை சற்குணராசா — கிளிநொச்சி.

★ கதிரன் சண்முகம் — பூநகரி.

★ சுந்தரலிங்கம் அனுராசா — பருத்தித்துறை.

★ அந்தோனிப்பிள்ளை றொபின்சன் — பருத்தித்துறை.

★ சின்னராசா ரமேஸ்குமார் — பருத்தித்துறை.

★ சண்முகநாதன் சிவநாதன் — அனலைதீவு.

★ தேவராசா லோகச்சந்திரன் — பண்டத்தரிப்பு.

★ ராசலிங்கம் கமலராசன் — 4 ஆம் மைல் கல் அருகில் கே. கே. எஸ். வீதி, இணுவில்.

★ குணரத்தினம் குணதாசன் — தெல்லிப்பழை கிழக்கு.

★ பொன்னையா கோபாலன்—நாகர் கோயில்.

★ சந்திரலிங்கம் ராஜ்குமார் — நாகர்கோயில்.

★ தர்மலிங்கம் அருள் ஞானவடிவேல் — நாகர் கோயில்.

★ சத்தியானந்தன் சசிகரன் — மிருசுவில்.

★ கந்தரம் சிவநேசன் — மிருசுவில்.

★ தேவராசா ரவிந்திரன் — பண்டத்தரிப்பு.

★ சின்னான் சந்திரசேகரம் — சிறுப்பிட்டி மேற்கு.

★ இளையதம்பி தவராசா — நீர்வேலி வடக்கு.

★ லோறன்ஸ் பிரான்ஸிஸ் வில்லியன்ஸ் — மண்டைதீவு.

★ அஸ்ரின் அலெக்ஸ் யூலியஸ்பாலா — குருநகர்.

★ சகாயநாதன் அன்ரன் ஜெயசீலன் — குருநகர்.

★ கொன்சாலிஸ் பிஸ்ரன்— குருநகர்.

★ கார்த்திகேசு அல்டின்— குருநகர்.

★ சோமபால எடின் பரோ — குருநகர்.

★ விஸ்வலிங்கம் — செல்வகுமார் — துன்னாலை.

★ ராமதாஸ் சிவதீபன்— ருத்தித்துறை.

★ சின்னத்தம்பி ரகுதரன்— மந்துவில்மேற்கு.

★ வேலு சின்னத்தம்பி— மந்துவில் மேற்கு. (ஐ-3)

# அட்டாளைச்சேனை விழா: ஜனாதிபதியின் விஜயம் ரத்து!

அட்டாளைச்சேனையில் நேற்று ஆரம்பமான முகமது நபி பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பங்குபற்ற மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் இவர்கள் பங்குபற்ற விருந்தனராயினும், பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும், பிரதமரும் தற்போதுள்ள நிலையில் இந்த விழாவில் பங்குபற்றுவது பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் என்று புலனாய்வுத் துறையினர் அறிவுறுத்தியதையடுத்து அவர்கள் விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. (ஐ 150- 3)

# செய்திச் சாரம்

## பாடசாலை பவள விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

கெருடாவில் இ. த. க. பாடசாலையின் பவள விழாவும் மலர் வெளியீடும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக யாழ். வலயம்—2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜாவும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினமும், கௌரவ விருந்தினராக சுவாமி சித்ரூபானந்தாவும் கலந்து கொள்வர். (ஐ)

## கோப்பாய் கோட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கோப்பாய் கோட்ட பாடசாலை மாணவருக்கான கணித, விஞ்ஞானப் போட்டிகள் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்— 'யுனெஸ்கோ' நிறுவன ஆதரவில் நடைபெறும் கட்டுரை, நாவன்மை ஆகிய போட்டிகள் நாளை சனிக்கிழமை அத்தியார் இந்துக் கல்லூரியிலும் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன. (ஐ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10. 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அருட்செல்வி ஜி. செல்வராணி தலைமையில் நடைபெறும். (ஐ-4)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை, 18

யாழ். பல்கலைக்கழக கிரிக்கெட் அணியினருக்கும் யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணியினருக்கும் இடையேயான சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி பல்கலைக்கழக மைதானத்தில் இன்று காலை 8.30முதல் நடைபெறவுள்ளது. (ஐ)

## ஆசிரியசேவை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் ஏற்பாடு செய்துள்ள ஆசிரியர் சேவை வகுப்பு—1 பரீட்சைக்கான கல்விக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். எஸ். குமாரவேல் பொது அறிவு வினாத்தாள் தொடர்பாக விரிவுரை வழங்குவார். (ஐ-4)

## அதிபர் நியமனம்

நல்லூர், ஜூலை18

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய பிரதி அதிபர் க. ஜெயராசா ஏழாலை புனித இசிதோர் றோ. க. வித்தியாலய அதிபராகவும் நா. சிவசிதம்பரலிங்கம் ஸ்ரீ முருகன் வித்தியாலய பிரதி அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-103)

## ரதபவனி தெருவீதி உலா இம்முறை இல்லை

நல்லூர், ஜூலை 18

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம் ஆலயத்தில் ஆடிவேல் விழா ரதபவனி எதிர்வரும் 22 ஆம்திகதி நடைபெறவுள்ளது.

இம்முறை ரதபவனிவழமை போல் தெரு வீதியுலாவாக நடைபெறமாட்டாது. நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலய வீதியைச் சுற்றி மட்டுமே ரதபவனி இடம் பெறும். (ஐ-103)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை, 18

கைதடி இரட்சணிய சேனை இல்லத்தின் கண்காட்சிஇன்றுவெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது. (ஐ—4)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் வகுப்பு-1 வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)

## அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை18


இணுவில் தெஸ்பியன் கலை வட்டம் நடத்தும் மாதாந்த அறிவியற் கருத்தரங்குத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெஸ்பியன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் ''இருபதாம் நூற்றாண்டில் உலகப் புனைகதை இலக்கியங்கள்'' என்ற தலைப்பில் எழுத்தாளர் ஐ. சாந்தன் உரையாற்றுவார். (ஐ)

## 10 ஆவது ஆண்டு நிறைவு விழா

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினரின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், 11 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை பதவியேற்பு வைபவமும் புதிய தலைவரின் இல்லத்தில் இன்று நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகங்களின் பிரதேச தலைவர் லயன். வி. தில்லைநாதன் கலந்துகொள்வார்.

அண்மையில் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட உயிர்காக்கும் சேவைத் திட்டத்துக்குரிய அன்பளிப்புகள் இன்றைய [illegible] வுள்ளன. (ஐ)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் தம்பு துரைராசா

அன்னை மடியில்: 07 01—1936

ஆண்டவன் அடியில்: 21—07—1994

திதி: 18 - 07 - 97

எமது உயிரினுமினிய ஐயா! காலமெல்லாம் உங்கள் நிழலில் வாழக் கனவு கண்டிருந்தோம். காலன் கனவை கானல் நீராக்கி விட்டான். கலங்குகிறோம் ஐயா! மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்புமுகம் எம் நெஞ்சை விட்டகலாது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-1145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்நடைத் தீவனம் விற்பனைக்கு

எமது சங்கத்தில் கறவைப்பசு உணவு, மற்றும் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட சோளன் குருணல், தவிடு வகைகள், தேங்காய்ப் பிண்ணாக்கு என்பன மொத்தமாக விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/1143)



## D. சேனாதிராஜா M. H. D. I.

பல் கட்டுமிடம்
கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம்.

பிரதான வீதி,
( மக்கள் வங்கி அருகில் )
யாழ்ப்பாணம்.

(48442)



## THE SALVATION ARMY
**KAITHADY**

இரட்சணிய சேனை இல்லம்
கைதடி

★ கண்காட்சி ★

18 - 07 - 1997 – 19 - 07 - 1997
இரண்டு நாள்கள் நடைபெறும்.

மீண்டும் புதிய வகுப்புக்கள்
04 - 08 - 1997 இல் ஆரம்பம்
01 - 08 - 97 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

(சி/1142) - நிர்வாகி


# முன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நியாயமான தீர்வு வரவேண்டும்

## 'வீரமக்கள்தின' நிகழ்வில் 'புளொட்' பிரமுகர் உரை

நல்லூர், ஜூலை 18

தீர்வுப் பொதி என்ற ஒன்றை வைத்துக் கொண்டு நாம் தரத்தயார்; அவர்கள் ஏற்கிறார்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறது அரசு. இதற்காகத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து முன்னணி ஒன்றை அமைத்தோம். மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் நியாயமான தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

புளொட் அமைப்பின் செயலாளர் நாயகம் உமாமகேஸ்வரனின் எட்டாவது நினைவு தினத்தைமுன்னிட்டு நல்லூர் கைலாசபிள்ளையார்கோயில் முன்றலில் நடைபெற்ற வீர மக்கள் தின இறுதி நாள் கூட்டத்தில் பேசிய 'புளொட்' அமைப்பின் பிரசாரச் செயலாளர் இருதயராஜா இவ்வாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

தமிழ்க் கட்சிகள் ஒரு முன்னணியாக மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தின் கீழ் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என இன்று அரசை வற்புறுத்தி வருகின்றன.

தமிழர்கள் என்ற பெயர் போய் அகதிகள் என்ற பெயர் எமது இனத்திற்கு ஏற்பட்டுள்ளது. இங்கு மக்கள் பல இன்னல்களுக்குள் தமது வாழ்வுக்காகப் போராடுகின்றனர். துப்பாக்கிக் குழாய்களின் பார்வை எமிகள் மீதுள்ளது. துப்பாக்கி முனையில் பூட்டப்பட்டிருக்கும் ஜனநாயகத்தை துப்பாக்கி முனையில் திறக்க எங்களாலும் முடியும். தமிழர்களை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுக்க நாம் ஒன்று பட வேண்டும்.

இயக்கங்கள் ஒற்றுமையுடன் செயற்பட முடியாதா என மக்கள் கேட்கிறார்கள். எல்லா இயக்கங்களும் கற்றுமையுடன் இணைந்து போராட வேண்டும் என வற்புறுத்தியவர் எமது செயலாளர் நாயகம் உமாமகேஸ்வரன். எமது சிங்கள ஒலிபரப்பின் மூலம் தமிழர்களின் உரிமைப்போராட்டம் குறித்து காத்திரமான பிரசாரங்களை மேற்கொண்டதுடன் அரசுக்கு எதிரான சக்திகளை இணைத்துக் கொள்வதன் மூலம் சர்வதேச அரங்கில் தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை உணரவைத்தோம். விஜய குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் சிங்கள புத்திஜீவிகளும் தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை உணர வழியமைத்தது. உமாமகேஸ்வரனின் மதிநுட்பமே — என்கிறார்.

இருதயராஜன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் தம்மை அர்ப்பணித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளும் எந்த இலட்சியத்திற்காக தம்மை தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியம் நிறைவடைய வேண்டும்; அவர்களின் அர்ப்பணிப்புக்கள் மதிக்கப்பட வேண்டும். அதற்காகவே எமது அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் வீரமக்கள் தினத்தைக் கொண்டாடுகிறது என்றார்.

மோகன், ஜெயச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-111-15)

## நல்லின தென்னம் கன்றுகள்

தென்மராட்சி, ஜூலை 18

மீசாலை வடக்கு கமநல சேவைகள் திணைக்களத்தினால் நாற்றுமேடையில் வளர்க்கப்பட்ட தென்னங் கன்றுகள் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன,

கப்பலில் கொண்டுவரப்பட்ட நல்லினத் தேங்காய் நாற்றுக்கள் மேடையில் வளர்க்கப்பட்டன. தற்போது அவை பத்து ரூபா விலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுகின்றன. (ஐ-117)

## யுனெஸ்கோ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் ஆதரவில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் பங்குபற்ற பெயர்களைப் பதிவு செய்த ஆசிரியர்களை சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

## குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை குருபூர்ணிமா தின நிகழ்வுகள் காலை 8.45 மணிமுதல் நடைபெறவுள்ளன.

விழாவில் ஊனமுற்றோர் சிலருக்கு சன்மானம் வழங்கப்படவுள்ளது. விசேட சொற்பொழிவுகளைத் தொடர்ந்து நண்பகல் 12.30 மணிக்கு மதிய போசனம் வழங்கப்படும். (ஐ)


## இலக்கிய நண்பருக்கு ஓர் அறிவிப்பு

மூத்த எழுத்தாளர் வரதர் எழுதிய

**"யாழ்ப்பாணத்தார் கண்ணீர்"**

என்னும் கவிதை நூலின் வெளியீட்டு விழா 19 - 07 - 97 சனி காலை 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. அரச விடுமுறைகள் காரணமாக அவை தாமதமாகக்கூடும். தாங்கள் இதனையே அழைப்பாக ஏற்று சமுகந்தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம் -

இலக்கிய ஐம்பேராயம்.

(48438)



## 46 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு: 01 – 12 – 1948

உதிர்வு: 03 – 06 – 1997

இளவாலை வடக்கு

### அமரர் குணரட்ணம் சுந்தரலிங்கம்

திதி: 18 - 07 - 97

எங்கள் குடும்பத்தின் இனிய தலைவரே!
எல்லோர்க்கும் இதம் செய்யும் குணவானே!
சிறந்த வொருவர்த்தகராய்
சீரிய தோர் விவசாயியாய்
மின் தொழில் நுட்பவல்லுநராய்
உயர்ந்த உழைப்பாளியாய்
ஊருக்கு முன்மாதிரி மனிதராய்
உள்ளூரிப் பயன்மரம் போல் வாழ்ந்தீர்களே!
பஸ்ஸில் யாழ். நகர் செல்கையில்
குண்டு வடிவில் வந்த காலனவன்
கணப் பொழுதில் கவர்ந்து சென்றானோ?
உங்கள் பிரிவை எப்படித் தாங்குவோம்
எங்கள் நிழல்போல் எம்முடன் இருந்து
எங்களைக் காப்பாற்றுங்கள்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இன்று நடைபெறவுள்ள இவரின் ஆன்ம சாந்திக் கிரியைகளிலும் நண்பகல் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(48440)



## யாழ். மத்தியகல்லூரி நிறுவுநர் நாள்

ஆவணி முதலாம் திகதி (01-08-97)

எமது மத்திய அன்னையின் நிறுவுநர் நாள் மத்திய மைந்தர்களால் எதிர் வரும் 01 – 08 - 97 வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் மத்திய மைந்தர்களின்

**ஒன்று கூடலும், தபால் தலை, முதல் நாள் உறை மலர் வெளியீட்டு விழாவும் இடம்பெறும்.**

விழாவின் பின்னர் மதிய போசனம் இடம் பெறவுள்ளதால் மத்திய மைந்தர்களும், அனுதாபிகளும் தங்கள் துணைவியர்களுடன் சமுகமளிக்கவும்.

தனி நபர் விருந்துக்கு ரூபா 100/- ஆகும். ஆகவே கல்லூரியில் 26 - 07 - 97 இற்கு முன்பு பணத்தைச் செலுத்தி ஆசனத்தைப் பதிவு செய்து கொள்ளவும்.

என். இராஜதேவன், விழாக்குழுச் செயலாளர்.
சி. திருநாவுக்கரசு, உப செயலாளர்.

யாழ். மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி-1144)



## புலமைப் பரிசில் - மாதிரிப் பரீட்சை - 2

13 – 07 - 97 எமது நிறுவனத்தில் நடந்த பரீட்சையில்

1) மதுராந்தகா செல்வரட்ணம் — 161 புள்ளி
(சரவணபவானந்தா வித்தியாலயம் - கோப்பாய்)
2) தனரஞ்சிதராஜன் நிரஞ்சன் — 157 புள்ளி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை-யாழ்ப்பாணம்)
3) தர்ஷணா குகதாஸ் — 155 புள்ளி
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்)
4) இரங்கநாதன் கோகுல்நாத் — 155 புள்ளி
(ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி - புத்தூர்)

உயர்ந்த புள்ளி பெற்ற இவர்களுக்கு பாராட்டுதல்கள்.

20 - 07 - 97 இல் 3 ஆவது மாதிரிப் பரீட்சை வழமைபோல் நடைபெறும்.

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்.

(48439)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

வைண்டிங் மெஷின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 28/1, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [48441]

**தவறிவிட்டது**

கனகராசா யோகராசா தேசிய அடையாள அட்டை இல. 671192176V, விசேட அடையாள அட்டை இல. 0905011655 மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் என்ற முகவரியிடப்பட்ட அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்: 'ஆறுமுகம் சிற்பாலயம்' காளிகோயிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [48424]

கனகசபை கலியுகதாசன், கீரிமலை வீதி, சித்தங்கேணி என்ற விலாசமிடப்பட்ட எனது விசேட அடையாள அட்டை கடந்த 14-07-97 அன்று நல்லூருக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதன் முக்கியத்துவமுணர்ந்து தயவுகூர்ந்து ஒப்படைத்தால் மிக்க நன்றியோடு சன்மானமும் வழங்குவேன். தொடர்பு: கலியுகதாசன் போஸ்கோ— நல்லூர். [48432]

**தேவை**

புதிய, பழையபாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம். 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [48264]

## மனைப்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 18 மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் மனைப்பொருளியல் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)


## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

**G. A. Q.**

**Ist In com.**

**G. S. Q.**

**B. A part I**

**B. Com. Part I**

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

(48405)



## றோணியோ வேலைகள்

உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்

தொடர்பு:-

## திருவள்ளுவர் அச்சகம்

யாழ் மாநகரசபை அருகில்
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(48436)


---

மாபெரும்

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

**யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

பழைய மாணவர் சங்க நிதிக்காக

பங்கு கொள்ளும் கழகங்கள்:

(1) யாழ். பல்கலைக்கழகம்
(2) ஊரெழு றோயல் வி. கழகம்
(3) மயிலங்காடு - ஞான முருகன்
(4) இளவாலை யங் ஹென்றிஸ்

**இடம்: ஸ்கந்தா மைதானம்**

**காலம்: 19 - 07 - 97, 20 - 07 - 97, 27 - 07 - 97 பி. ப. 2.30 மணி**

(புதிய நேரம்)

அன்பளிப்பு:- ரூபா 10 மட்டும்

ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்,
கந்தரோடை சுன்னாகம்.

(சி/ 1137)

---

யா/தொண்டைமானாறு

## வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய

அபிவிருத்தி நிதிக்காக

பழைய மாணவர் சங்க ஆதரவில் நடைபெறும்

# முத்தமிழ் மாலை

## கலை நிகழ்வுகள்

- ★ நாட்டிய அரங்கம்
- ★ பட்டி மண்டபம்
- ★ நகைச்சுவைக் கதம்பம்
- ★ நாடகங்கள்
- ★ மின் நடனம்
- ★ அருணா இசைக் குழுவினர் வழங்கும் அமுத கானங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காலம்:** 19-07-97 சனி மாலை 6. 30 மணி

**இடம்:** வித்தியாலய அரங்கு.

அன்பளிப்பு:- ரூபா 20

— பழைய மாணவர் சங்கம்

(48434)

---

## நீங்கா நினைவலைகள் முதலாவது ஆண்டு



தாயின் மலர் மடியில்: 17-03-1981

காலதேவன் கைப்பிடியில்: 27-07-1996

செல்வன்

## பாலசுப்பிரமணியம் கிறிஸ்ணகுமார்

(கிறிஸ்ணா)

(யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி மாணவன்)

**திதி: 18-07-1997**

பெற்ற வயிறு கொதிக்க
உற்றதந்தை தவியாய்த் தவிக்க
உடன் பிறப்புக்கள் திக்குத்திசையறியா திகைத்து நிற்க

எங்கு சென்றனையோ? கிறிஸ்ணா
ஏங்கும் உள்ளங்களின் கொதிப்பறியாது
சாவினில் மீள வன்னி சென்றோமே அங்கு
சாவு ஷெல் அரக்கனால் வருமென் றறியோமே!
சௌந்தரமான உன் முகமும் துடிப்பான உன் செயலும்

நான்காவதாய் நீ பிறந்தாலும் குடும்பத்தின்
நலம்பேண உழைத்தாயே! கிறிஸ்ணா
காலனால் அழிக்க முடிந்தது உன் உடலைத்தான்
காலங் காலமாய் எமது நினைவலையில்
நீக்கமற நித்தமும் நிறைந்து எமதுள்ளத்தில்
வாழ்வாய் நிரந்தரமாய் கிறிஸ்ணா.

அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா, தங்கை, தம்பி.

தகவல்:-
S. பாலசுப்பிரமணியம்,
54, வேம்படிறோட்,
யாழ்ப்பாணம்.

(48394)

---

நமது அடிப்படை

யாழ்ப்பாணச் சொற்பொழிவு

**சுவாமி விவேகானந்தர் வெளியீடு**

விலை 5/-

ராமகிருஷ்ண மிஷன்
வெள்ளவத்தை,
கொழும்பு.

5 ரூபா பெறுமதியான முத்திரையைத் தபால் மூலம் அனுப்பினால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

கிடைக்குமிடம்:-
செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி-1134)

---

வண்ணை சாந்தையர்மடம்

## ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்

**சைவசமய அபிவிருத்திக் கழகம்**

நடத்தும்

## ★ கருத்தரங்கு ★

நாட்டின் இன்றைய காலச் சூழலில் சைவ சமயிகளின் பங்கு

**இடம்:-** யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்.

**நாள்:-** 19 - 07 - 1997 சனிக்கிழமை (பூரணைதினம்)

**நேரம்:-** பிற்பகல் 4. 00 மணி.

**கருத்துரை வழங்குவோர்**

- ★ பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா "சைவ நிறுவனங்களின் பங்கு"
- ★ திருவாளர் இரா. செல்வவடிவேல் "இந்து இளைஞர்களின் பங்கு"
- ★ பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் "சைவ ஆலயங்களின் பங்கு"
- ★ திருவாளர் க. சிவராமலிங்கம் "சைவப் பெருமக்களின் பங்கு"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர்
366, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஆதரவு நல்குவோர்:

## ★ வினோ நகைப்பூங்கா ★

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1139)

---

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 | 25 |
| 02 | 07 |
| 1910 | 1991 |

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலடியில் வாழ்ந்த

அமரர்

## அப்பாக்குட்டி பொன்னுத்துரை

(சொக்கர்)

**திதி: 18-07-1997**

விண்ணகத்தே சென்றுவிட்டீர் ஆறு ஆண்டு — இந்த மண்ணகத்தே சென்றாலும் நீங்கள் வாழ்ந்த — அந்த பண்புமிக்க வாழ்க்கை தன்னை மறக்கமாட்டோம் — என்றும் கண்களிலே உங்கள் உருவம் சுமந்து வாழ்வோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

175/6, கைலாசபிள்ளையார்
கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/1141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நவம்பரில் அசாத்தியம்!

இனப் பிரச்சினைக்கான உத்தேச தீர்வுத் திட்டத்தை, எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னதாக அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட முடியுமா?

தெரிவுக் குழுவினால் தீர்வுத் திட்டம் ஆராயப்படும் ஆமை வேகம், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தீர்வுத் திட்டத்தின் வெவ்வேறு அம்சங்கள் — சரத்துகள் — குறித்துக் கொண்டுள்ள கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், அவை குறித்துக் கருத்திணக்கம் காண்பதில் உள்ள தாமதம், இயலாமை என்பன நவம்பருக்கு முன்னர் இது சாத்தியமற்றது என்பதனை மிக மினுக்கமாகக் காட்டுகின்றன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் டி.எம். ஜயரத்னாவும் தீர்வுத் திட்டத்தை நவம்பருக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் கொண்டு வருவது சாத்தியமற்றது என்று இப்போது அடித்துக் கூறியிருக்கிறார். இதனை அவர் தமது தனிப்பட்ட கருத்தாகச் சொல்லியிருந்தாலும் உண்மை நிலை அதுதான்.

இந்தச் சரியான நிலை ஏனைய அமைச்சர்கள், அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயமாகத் தெரியும்.

தீர்வுத்திட்டத்தைநாடாளுமன்றத்தில் சட்ட வடிவில் சமர்ப்பித்து அதற்குள்ள ஆதரவு - எதிர்ப்பு நிலையை அறிந்து விட வேண்டும் என்ற ஆவலும் அக்கறையும் ஜனாதிபதிக்கு இருக்கலாம்; இவ்வாறு ஒரு கால எல்லையைக் குறிப்பிட்டுக் கூறுவதால், அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதில் தமக்கு இதயசுத்தியான ஈடுபாடு உண்டு என்று சர்வதேசத்துக்குக் காட்டலாம் என்றும் அவர் நினைத்திருக்கக் கூடும். அதன்பொருட்டு அமைச்சர் பீரிஸ் ஊடாக இந்தக் காலவரம்பை ஜனாதிபதி வெளிப்படுத்தி இருக்கலாம்.

தீர்வு யோசனையின் முதுகெலும்பாகக் கருதப்படும் முக்கிய அம்சங்கள் குறித்து தெரிவுக்குழு இன்னும் தீர்க்கமான முடிவுகளுக்கு வரவில்லை. அந்த அம்சங்களுக்கு அரசின் அங்கத்துவக் கட்சிகள் ஆதரவு வழங்கவில்லை. சில முக்கிய விடயங்களின் தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாட்டை, கோரிக்கையை ஏற்றுக் கொள்ள சிங்களத் தரப்புக் கட்சிகள் தயாரில்லை.

போரில் வெற்றி கொள்வதிலும் தொடர்வதிலும் காட்டப்படும் தீவிரமும், வேகமும், அக்கறையும் அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டால் மட்டுமே, இப்போதுள்ள தேக்க நிலை நீங்கி, தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதில் உள்ள தாமதத்தைக் குறைக்கலாம்.

தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் போக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வைகொண்டு வரவோ, நீதியுடனான சமாதானத்தை உருவாக்கவோ ஒருபோதும் உதவப் போவதில்லை.

எல்லோரும் ஏறி விழுந்த முடக் குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்த கதையாகவே முடியும்.

# மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவுடன் இணைந்து வடக்கு அபிவிருத்தி

## ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூலை 18

வடமாகாண புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளை வடக்கு புனர் வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை இனிமேல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணைந்தே மேற்கொள்ளும்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட எம். பிக்களான டக்ளஸ் தேவானந்தா, சிவதாசன், தவராஜா ஆகியோரும், ஈ.பி.டி.பியின் ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வர், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீர, வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா, மாகாண பிரதம செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, யாழ்ப்பாணம் — கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

வடக்கு, சிவில் நிர்வாகப் பணிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு, மாகாணசபை, வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை ஆகிய மூன்றும் கையாள்வதாகவும் —

ஆனால் நிர்வாக, அபிவிருத்தி வேலையைக் கவனிக்க வேண்டிய முக்கிய அமைப்பான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்குத் தகவல் தெரிவிக்கப்படாமலேயே பல பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் —

இது ஒரு தவறான போக்கு என்றும் — கூட்டத்தில் எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர்.

அதையடுத்து இனிமேல் அனைத்துப் பணிகளையும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் எனக் கொள்கை அளவில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாதாமாதம் இத்தகைய கூட்டத்தைக் கூட்டி, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குப் போக்குவரத்து வசதிகளின்றி மன்னார், கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நிர்க்கதியாகியிருப்போருக்கு ஒருவார காலத்துக்கான உணவு விநியோகத்தை உடனடியாக மேற்கொள்வது.

★ ஒரு வார காலத்துக்குள் போக்குவரத்து ஏற்பாடுகள் சீராகாவிட்டால் தற்போது அந்த இடங்களில் சிக்கியிருப்போரில் நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், அரசாங்க அலுவலர்கள் போன்றோரை திருகோணமலைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்து வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தல்.

★ யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளுக்கு சாதாரண வட்டி வீதத்திலும் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கி உதவுதல்.

★ இடம்பெயர்வு காலத்தில் பல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உலர் உணவு விநியோகத்துக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது: இவை குறித்து விரிவாக ஆராய்ந்து உண்மையில் பொருள்கள் சூறையாடப்பட்டிருந்தால் அந்தப் பெறுமதியை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அறவிடாமல் விடுவது.

★ தீவக சேவையில் உடனடியாகக் "குமுதினி" படகை சேவையில் ஈடுபடுத்த அவசர நடவடிக்கை எடுத்தல்.

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான ஒட்சிசன் சிலிண்டர் தடையின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல்.

(உ)

## பரிசளிப்பு வைபவம்

நவாலி, ஜூலை 18

கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்திய திருவாசக வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும்.

வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பேராசிரியர் க. கந்தசாமி பரிசில்களை வழங்குவார்: (இ-31-100)

## மீட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால் 1997 ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு கிறிஸ்தவ மாணவருக்கான புதிய பாடத்திட்டத்துக்கமைய மீட்டல் வகுப்புகள் இன்றும் நாளையும் யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற உள்ளன. (இ)

# ஊர்காவற்றுறை கிணறு ஒன்றில் மண்டை ஓடுகளும் எலும்புகளும்!

ஊர்காவற்றுறைப் பகுதியில் கிணறு ஒன்றைச் சுத்தம் செய்தபோது மூன்று மண்டை ஓடுகளும், சில எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிணற்றைத் துப்புரவுசெய்யும் நோக்குடன் கிணற்றை இறைத்தபோது இவை அகப்பட்டதாகவும் — பின்னர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் இவை ஒப்படைக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலீஸார் யாழ். நீதிவான் எஸ். என். இராமச்சந்திரன் முன் மனு ஒன்றை சமர்ப்பித்தனர்.

அப்பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் அவற்றைப் புதைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

90 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்த சமயம் கிணற்றில் வீழ்ந்தவர்களின் மண்டை ஓடுகளாக இவை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (இ-3)

# தபால் திணைக்களத்தை விரைவில் கூட்டுத்தாபனமாக மாற்ற முடிவு

## 5 ஆண்டுகளில் 200 கோடி ரூபா நஷ்டம்

கொழும்பு, ஜூலை 18

தபால் திணைக்களம், கூட்டுத்தாபனமாக மாற்றப்பட உள்ளது:

கடந்த 5 ஆண்டு காலமாக தபால் திணைக்களம் 200 கோடி ரூபா வரை நஷ்டமடைந்துள்ளது என்றும் —

இதனால் தபால் சேவையை மீளமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றம் அடைந்த தபால் சேவையை மக்களுக்கு வழங்குவதற்காக அதனை வர்த்தக நிறுவனமாக மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நஷ்டம் பெறும் நிலையில் உள்ள தபால் சேவையை முன்னோக்கி எடுத்துச் செல்வதா? அல்லது மீள ஒழுங்கமைப்பதா? என்ற பிரச்சினையை நாங்கள் எதிர்நோக்கினோம்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் அமைச்சரவையின் பணிப்புரையின் பேரில் தபால் சேவையைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தற்போது தபால்தொலைத் தொடர்புகளில் உள்ள வளங்களை மீள ஒழுங்கமைப்பதன் மூலம் நாட்டுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தபால் திணைக்களம் 175 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது: தற்போது நாட்டில் 573 தபால் நிலையங்களும் 3 ஆயிரத்து 452 உப தபால் நிலையங்களும் உள்ளன: இவற்றுடன் 203 முகவர் தபால் நிலையங்களும் இயங்கி வருகின்றன. (இ-4)

# இந்தியாவிலிருந்து நேரடியாக காங்கேசனுக்கு சிமெந்து

கொழும்பு, ஜூலை 18

குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள இந்தியாவில் இருந்து உடனடியாக 80 ஆயிரம் பைக்கெட் சிமெந்தை கப்பல் மூலம் நேரடியாக காங்கேசன்துறைக்கு தருவிப்பது என்று கொழும்பில் நடந்த மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் குறிப்பாக திருச்சியில் இருந்து கப்பல் மூலம் இந்த சிமெந்தை எடுத்து வருவது என்றும்—

அத்துடன் புனர்வாழ்வுப் பணிக்கு தேவையான கூரைத்தகடுகளை திருச்சியில் இருந்து எடுத்துவர முயற்சி எடுப்பது என்றும்—இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. (இ-3-164)

# பயிற்சிக்கு வந்த கான்ஸ்டபிள் பாறையில் சடலமாக மீட்பு!

## திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை 18

திருகோணமலைக் கடற்கரை ஓரத்தில் பாறை ஒன்றில் இருந்து அடி காயங்களுடன் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மொனராகலையைச் சேர்ந்த விவாகமான ஆர். எம். குணரத்தின (25 வயது) என்ற கான்ஸ்டபிளின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

சீனன்வாடிப் பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் இவர் பயிற்சி ஒன்றுக்காகத் திருகோணமலை பிரட்றிக் கோட்டையில் உள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற வந்த சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-3-150)

## நாளை

**ஆடி 03**

**சனிக்கிழமை**

திதி: சதுர்த்தசி முற்பகல் 11.46 வரை.

நட்சத்திரம்: பூராடம் முன்இரவு 10.19வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 3.01-4.31

ராகுகாலம்: 9.01-10.31

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பொது அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் பல்கலைக் கழக அனைத்துப் பீட வருட மாணவர்களுக்கான பொது அறிவும் பொது உளச் சார்பும் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை பல்கலைக்கழக பழைய நூலக மண்டபத்தில் நடைபெறும்.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் இது வரை அனுமதிப்பத்திரத்தை பெறாதவர்கள் இன்று 9மணி முதல் 10 மணிவரை அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

## வன்னியில் பேரணி

கொழும்பு ஜூலை 18

ஸ்ரீலங்கா அரசின் பேரினவாதத்தைக் கண்டித்து வன்னியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது. இப்பேரணியில் 75 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர் (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தைக்குமுன் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்

## பீரிஸ் நேற்று பி.பி.ஸிக்கு பேட்டி

கொழும்பு, ஜூலை 19

''விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும். பேச்சுவார்த்தைக்கான ஒரு காலஎல்லையை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த நிபந்தனைகளை புலிகள் ஏற்றுக்கொண்டால் அரசாங்கம் புலிகளோடு பேசத்தயாராக இருக்கிறது''

இப்படி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வைத் தேடும் அதே நேரத்தில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் முறியடிக்கச் செய்யும் அரசின் இரட்டை உத்தியில் முரண்பாடு எதுவும் இல்லை.

எல்லா விவகாரங்களையும் விவாதிக்க புலிகள் தயாராக இருக்கவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட முன்னர் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையான கட்சிகள் மத்தியில் ஏகோபித்த கருத்து ஒற்றுமை ஏற்படுவது மிகவும் அவசியம்.

பேச்சுவார்த்தைகளின் எல்லைகளைப்பற்றி நாடாளுமன்றில் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் முதலில் இணக்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படியானதொரு கட்டத்தில்தான் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் நல்ல பலனைத்தரும்.

இப்படி அவர் கூறினார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் கடல் வழி ஊடாக யாழ். குடாநாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

குடாநாட்டில் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான உணவு, எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கடல் வழிப்பாதை ஊடாகவே தருவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கடல் வழிப் பாதையைத் தடுக்கும் புலிகளின் செயலானது யாழ். குடாநாட்டை சோமாலியா ஆக மாற்றும் நடவடிக்கை ஆகும்.

அன்று தீவக மக்களின் கால் போன்று இருந்த 'ஐரிஷ் மோனா' கப்பலைக் கடத்தி அந்த மக்களின் போக்குவரத்தைச் சீர்குலைத்தனர்; மருதங்கேணி, இவவாலை போன்ற இடங்களின் பயணிகள் பஸ்ஸைத் தாக்கினர்; பின்னர் மன்னாரில் பயணிகள் கப்பலைத் தீக்கிரையாக்கினர். இப்போது மக்களுக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களைத் தாக்கி கடல் வழிப் பாதையை முற்றாகத் துண்டிப்பதாக அறிக்கையும் விடுகின்றனர்.

படையினர் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பு கப்பலில் வந்த பொருள்களைக் கைப்பற்றிய புலிகள், இன்று கப்பலில் வரும் உணவுப் பொருள்களை இராணுவத் தளபாடம் என்கின்றனர்.

அத்தோடு தமது மருத்துவ தேவைக்காகவும், தமது உறவினருடன் தொடர்பு கொள்ளவும், தமது அலுவலகக் கடமைகளை மேற்கொள்ளவும் பிற இடங்களுக்கு செல்ல வேண்டிய யாழ். குடாநாட்டு மக்கள் இன்றைய சூழலில், கடல் வழிப் பாதையையே நம்பியிருக்கின்றார்கள்.

அன்று பூநகரிப் பாதையை திறக்க நிபந்தனை விதித்த புலிகள் இன்று வன்னிக் காட்டில் இருந்து கொண்டு மீண்டும் குடாநாட்டு மக்களின் பாதையைத் தடுக்கிறார்கள்.

அரச படையுடனான போரை வேண்டுமானால் புலிகள் மக்கள் அற்ற பகுதிகளில் நடத்திட்டும். மக்களின் போக்குவரத்துக்கான பஸ், கப்பல், விமான சேவைகளை தடுப்பதையும் அவற்றின் மீது தாக்குதல் நடத்துவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது அன்றாட —அமைதி— வாழ்க்கையை நிம்மதியாகத் தொடர விரும்பும் தமிழ் மக்களைப் புலிகள் நசிப்பது ஏன்?

அவர்களின் அர்த்தமற்ற இத்தகைய செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரமேஸ் (வயது 16) சாவகச்சேரி வடக்கு.

★ செல்லையா சிவசுதன் (வயது 17) மானிப்பாய் தெற்கு.

★ ஆண்டிஐயா குபேந்திரன் (வயது 16) வத்திராயன் தெற்கு தாளையடி.

★ முதலி விஜயராஜா (வயது 23) கந்தரோடை.

★ காசிநாதன் உதயநாதன் (வயது 24) நவாலி தெற்கு.

★ சாமித்தம்பி விநாயகமூர்த்தி (வயது 10) வல்வெட்டி.

★ மார்க்கண்டு பிரபாகரன் (வயது 19) சாவகச்சேரி வடக்கு.

★ சிவசுப்பிரமணியம்சிவாகரன் (வயது 17)சாவகச்சேரி வடக்கு.

★ முருகையா அசோக்குமார் (வயது 19) நவாலி வடக்கு.

★ வரப்பிரசிங்கம் சந்திரமோகன் நவாலி தெற்கு.

★ வரப்பிரசிங்கம் சந்திரபவானி (வயது 23) நவாலி தெற்கு.

★ சண்முகநாதன் வசந்தகுமாரி நவாலி வடக்கு,

★ நாகேசு குணசேகரம் (வயது 28) நவாலி தெற்கு.

★ முருகையா செல்வலிங்கமூர்த்தி (வயது 29) நவிண்டில் கரவெட்டி,

★ பாலசுந்தரம் பாஸ்கரன் (வயது 18)சாவகச்சேரி வடக்கு.

★ சின்னத்தம்பி இந்திரபாலன் (வயது 37) கைதடிச் சந்தி.

★ ஆறுமுகம் சிவபாதம் (வயது 47) நவாலி தெற்கு. (இ-4)

## நாராயணன்...

(முதலாம் பக்கத் தொடர்)

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எந்தவொரு வேட்பாளரும் பெற்றிராத அதிக வாக்குப் பதிவு இது.

ரி. என். சேஷன் பெற்ற வாக்குகளின் மதிப்பு 50 ஆயிரத்து 631 ஆகும் அவர் கட்டுப் பணத்தை இழந்தார்.

கே. ஆர். நாராயணன் அடுத்த ஜனாதிபதியாக இம்மாதம் 25 ஆம் திகதி பதவி ஏற்கிறார். (இ-4)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சாளர் சரத் முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

சண்டையில் புலிகள் தரப்பில் 60 பேர் இறந்ததாகவும் —

இறந்தவர்களில் 17பேரின் உடல்களைப் படையினர் கைப்பற்றியதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் தமது தரப்பில் லெப். நிலவன் கப்டன் அரவிந்தன் ஆகிய இரு போராளிகள் களப்பலியானதாக புலிகளின் குரல் வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

நேருக்கு நேர் இடம்பெற்ற இந்த சண்டை மூன்று மணி நேரம் நீடித்தது.

இத்தாக்குதலின் போது புலிகள் மோட்டார் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தினர் என்றும்— படையினர் பீரங்கிகள் மற்றும் மோட்டர்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-4-5-10-164)

## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம் ஜூலை 18

நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களது ஒரு தொகுதி விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அத்தியார் இந்துக் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

ஏழாலைமேற்குகுப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை புன்னாலைக் கட்டுவன் சிவில் நிர்வாக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும். (இ-4)

## நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்)

செல்ல சில கப்பல் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. என்றும் தெரிவிக்கப்படுகிறது-

அதேசமயம் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் சேவையை எதிர் வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் ஆரம்பிக்க வசதியாக கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் அலுவலகத்துக்கு நேற்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

இந்த சேவையில் ஈடுபட்ட ''சஜிந்த'' கப்பல் வடக்குக்கான சரக்குப் பொருள்களை ஏற்றும் பணியை கொழும்பில் ஆரம்பித்துள்ளதால் பயணிகளுக்காக வேறு கப்பலை வாடகைக்கு அமர்த்த விருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் திருமலையில் தரித்துள்ள தராகி கப்பல் மன்னார் - காங்கேசன்துறைக்கான சேவையை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகதிகளை ஏற்றி இறக்கும் பணிக்காக 'சஜிந்த', 'தராகி' ஆகிய இரு கப்பல்களையே அத்தியாவசியசேவைகள் நாயகம் திணைக்களம் முன்னர் வாடகைக்கு அமர்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3-21-150)

## வட கொரிய...

(முதலாம் பக்கத் தொடர்)

அனைவரையும் ஒரே தடவையில் அனுப்ப முடியாத நிலையில் அடுத்து வரும் தினங்களில் அவர்களும் வட [illegible] படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10-21)

# ஜனாதிபதி திடீர் லண்டன் விஜயம்!

கொழும்பு, ஜூலை 18

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று லண்டன் பயணமானார்.

அவர் நாடு திரும்பியதும் அரசியல் தீர்வுத்திட்டத்தை மக்களிடம் எடுத்துச் சென்று விளக்கும் பணிகள் ஆரம்பமாகும் என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

சந்திரிகாவின் மகன் விமுத்தி மகள் ஜசோதரா ஆகியோரும் லண்டன் சென்றுள்ளனர்.

வார இறுதியில் அவர்கள் நாடு திரும்புவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேற்றுக் காலை பதில் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டம் ஜனாதிபதி தலைமையில் களுத்துறையில் நடந்த இரு நாள் கலந்துரையாடலின் போது அரச தரப்பு எம். பிக்களினாலும் கட்சிகளின் அமைப்பாளர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடல் முடிவடைந்த கையுடன் ஜனாதிபதி லண்டன் புறப்பட்டுச் சென்றிருப்பது அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்களை கிளப்பி உள்ளது.

(இ-4-10)

# வல்லைச் சம்பவம் குறித்து படைத்தரப்பில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கடந்த சனியன்று வல்லை வெளியில் இராணுவக் காவலரண் ஒன்றில் வைத்துத் தொண்டர் ஆசிரியரான இளம்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக வெளியான செய்திகள் தவறானவை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ விசாரணைகளின் போது தெரிய வந்த தகவல்களை அவ்வட்டாரங்கள் வெளியிட்டன. அது வருமாறு:-

தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட பெண்ணின் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பாக குறிப்பிடும் நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்; சம்பந்தப்பட்ட பெண்ணும் புலோலி சட்டவைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டார்: தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக அங்கு வைத்தும் அப்பெண் தெரிவித்தார்.

எனினும் மருத்துவ அதிகாரியின் பரிசோதனைகளின் போது அப்பெண் பாலியல் உறவில் ஈடுபட்டார் என்பது தெரியவந்தது. ஆனால் அவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதற்கான தடயங்களோ, சான்றுகளோ இருக்கவில்லல என சட்ட வைத்திய அதிகாரி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் அந்தப் பெண் தெரிவித்த முறைப்பாடு தவறு எனத் தெரிகின்றது.

—இவ்வாறு இராணுவ வட்டாரங்சள் உதயனுக்குத் தெரிவித்தன. (உ)

### கிருஷாந்தி கொலை வழக்கு:

# 9 படையினருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் தாக்கல்

கொழும்பு, ஜூலை 18

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி கற்பழிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டது —

அவரின் சகோதரன், தாயார், அயலவர் படுகொலை செய்யப்பட்டது — தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 9 இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

மேல் நீதிமன்ற நீதியரசர்கள் நிமால் ஈ திஸநாயக்கா, காமினி அபயரட்ண, அன்றூ சோமவன்ஸ ஆகியோரைக் கொண்ட விசேட நீதியரசர்கள் சபையின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

9 சந்தேக நபர்களினதும் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு விசேட நீதியரசர்கள் குழு பொலீஸ் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. (இ-4)

# ஐ. முன்னணியில் லாலுவுக்கு இடமில்லை

புதுடில்லி, ஜூலை 18

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழிநடத்தும் கூட்டத்தில் 4 மணித்தியாலயங்கள் விவாதிக்கப்பட்ட பின்னர் பிஹார் முதல்வர் லாலு பிரசாத் யாதவின் தேசிய ஜனதாதள் கட்சியை ஐக்கிய முன்னணியில் சேர்ப்பதில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## கப்பல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பல் சேவைகளுக்கு வழித்துணை வழங்க செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும் இணக்கம் தெரிவித்துள்ளன என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கொழும்பில் நேற்று முன்தினம் வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர தலைமையில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள மேலதிகச் செயலாளர் எம். ஏ. ரபீக் மற்றும் செஞ்சிலுவைக் சர்வதேசக் குழு. அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பயணிகள், மற்றும் சரக்குக் கப்பகல்ளுக்கு வழித்துணை வழங்க இணக்கம் தெரிவித்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள், கப்பலில் பொருள் ஏற்றும் போது தமது அமைப்புப் பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்காக ஜெனிவாவில் இருந்து மேலதிக அதிகாரிகள் அழைக்கப்படுவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(இ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org